YISHUN SECONDARY SCHOOL
Subject & Code: Tamil (1198)
Level & Stream: Sec 1(Normal Academic/NT SBB)

| **The Curriculum and Approaches to Learning** | | **Key Programmes / Competitions** |
|---|---|---|
| படித்தல், எழுதுதல், கேட்டல், பேசுதல் ஆகிய திறன்களின்வழி மாணவர்கள் தங்கள் மொழியாற்றலில் சிறப்படைவதுடன் கற்றலின் வெற்றியாகிய மகிழ்வூட்டும் கற்றலை அவர்கள் அனுபவிக்க வேண்டும் என்னும் நோக்கத்துடன் அவர்களது எதிர்காலத் தேவைகளுக்குரிய தொழிற்நுட்பத் திறன் பூர்த்தி செய்யப்படுதலையும் கருத்தில் கொண்டு இப்பாடத்திட்டம் அமைக்கப்பட்டுளது. | | பொங்கல் விழா, இரு வார தமிழ்மொழி விழா, தமிழ்மொழி முகாம், வாசிப்புப் பயிற்சித்திட்டம், சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகப் போட்டிகள், தமிழ்மொழி மாதப் போட்டிகள் |
| **Term / Week** | **Learning Experiences (chapter, activity)** | **Learning Outcomes & Assessment** |
| 1 | **<u>படித்தல்</u>**<br>புதிய மாற்றத்தைப்(புதிய பள்ளி) பற்றி அறிந்துகொள்ளுதல், தமிழர் விழா(பொங்கல்) பண்பாடு , அனுபவங்களைப் பற்றிப் படித்து அறிந்து கொள்ளல். கருத்தறிதல் பகுதிகளைப்படித்துப் புரிந்துகொள்ளல், | உரையாடல் பகுதியைப் புரிந்து கொள்வர்.<br>உச்சரிப்பில் தெளிவைப் பெறுவர்<br>குரல் ஏற்ற இறக்கத்துடன் படிக்க அறிந்து கொள்வர் |
| | **<u>எழுதுதல்</u>**<br>உன்னை நீ அறிய, அறுவடைத் திருநாள் ஆகிய கருத்தறிதல் பகுதிகளைப் படித்து பொருள் உணர்ந்து எழுதுதல், எதிர்பாராதது என்ற தலைப்பில் சிறுகதை எழுதுதல் | பனுவலைப் படித்துக் பொருத்தமான சொற்களைத் தேர்ந்தெடுத்து எழுதுவர்.<br>தகவல்களைத் திரட்டி எழுதக் கற்றுக் கொள்வர்.<br>நானும் ஒரு படைப்பாளி என்னும் தலைப்பில் சிறுகதை எழுதுவார்கள். |
| | **<u>கேட்டல்</u>**<br>காட்சிக்கூடங்கள், பொங்கலோ பொங்கல் என்னும் கேட்டல் பகுதிகளைக் கேட்பர். | ஒலிப்பகுதியைக்கேட்டு எழுத்துவழிக் கருத்துப் பரிமாற்றம் செய்வர் |
| | **<u>பேசுதல்</u>**<br>நடவடிக்கைகளைப்பற்றிப் பேசித் தனது கருத்துகளை வெளிப்படுத்துதல் | கருத்துகளை நிரல்பட ஒழுங்கு படுத்திக் கூறுவர் |

| | | |
|---|---|---|
| | கலவைமுறைக் கற்றல், மாணவர் கற்றல் தளங்களில்வழிக் கற்றல். | |
| 2 | **<u>படித்தல்</u>**<br>நம்பிக்கை வந்தது என்ற உரையாடல் பகுதியைப் படித்து கருத்துகளைப் புரிந்து கொள்ளல், தீர்வு காண்போம் என்னும் பகுதியைப் படித்து கருத்துக்களைப் புரிந்து கொள்ளல்.<br><br>**<u>எழுதுதல்</u>**<br>உரையாடல், மின்னஞ்சல் ஆகிய எழுத்துப் பயிற்சிகளைப் பெறுதல்<br>கருத்தறிதல் பகுதியைப் படித்துப் புரிந்து எழுதுதல்<br><br>**<u>கேட்டல்</u>**<br>நானும் தமிழும் என்னும் நோக்கல் கருத்தறிதல் பகுதியை நன்கு கேட்டுப் புரிந்துக்கொள்ளவார்கள்.<br><br>**<u>பேசுதல்</u>**<br>தமிழும் நானும் என்னும் தலைப்பிலும், வாழ்க்கையின் குறிக்கோள்கள் பற்றியும் இருவழித் தொடர்பு பற்றிப் பேசுதல்<br><br>கலவைமுறைக் கற்றல், மாணவர் கற்றல் தளங்களில்வழிக் கற்றல். | அருஞ்சொற்களுக்கு இடம்நோக்கிப் பொருள் உணர்வர்.<br>கதையைப் படித்துப் புரிந்துணர்வை வெளிப்படுத்துவர்.<br><br>கொடுக்கப்பட்டிருக்கும் தலைப்புகளில் ஒன்றைத் தேர்ந்தெடுத்துத் தெளிவாகவும் நிரல்படவும் எழுதுவர்<br><br>ஒலிப்பகுதியைக் கேட்டுப் பயிற்சியின்வழிப் புரிந்துணர்வை வெளிப்படுத்துவர்.<br><br>கொடுக்கப்பட்டிருக்கும் படங்களைப் பார்த்துப் பொருத்தமான வாக்கியங்களைக் கூறுவர் |
| 3 | **<u>படித்தல்</u>**<br>உணவு வகைகள், இணையத்தின் வழி வியாபாரம், ஆகிய தலைப்புகளில் ‘1B’ பாடநூலில் கொடுக்கப்பட்டுள்ள பனுவல்களைப் படிப்பர்.<br>**<u>எழுதுதல்</u>**<br>மின்னஞ்சலின் கூறுகளை அறிந்து தலைப்பிற்கேற்ற கருத்தைச் சேகரித்து மின்னஞ்சல் எழுதுவர்.<br>கணினியின் பயன்கள் என்ற தலைப்பில் சுவரொட்டியைத் தயாரிப்பர். | சரியான உச்சரிப்போடு, பொருத்தமான இடங்களில் நிறுத்தி வாய்விட்டுச் சரளமாகப் படிப்பர்.<br><br>சுவரொட்டியின் பயன்களையும் அமைப்பு முறைகளையும் அறிந்துகொள்வர் |

| | | |
|---|---|---|
| | **<u>கேட்டல்</u>**<br>தொகுதி 1 மற்றும் 2ற்கான கேட்டல் பகுதியை நன்கு கேட்டுப் புரிந்துக்கொள்ளவார்கள்.<br><br>**<u>பேசுதல்</u>**<br>ஒவ்வொரு பாடத்தொகுதியிலும் நுழைவாயில் பகுதியில் கொடுக்கப்பட்டிருக்கும் படங்கள், வினாக்கள் மற்றும் ஒளிக்காட்சிகளைப் பற்றிக் கலந்துரையாடுவர்.<br>**<u>இலக்கணம்:</u>**<br>- சொல்லுக்கு முதலில், இடையில், இறுதியில் வரும் எழுத்துகள்<br>- வினாச்சொல், சுட்டுச்சொல், பதிலிடு பெயர்<br>- வல்லின மெய் மிகும், மிகா இடங்கள்,<br>- தெரிநிலை, குறிப்பு வினைமுற்று, வேற்றுமைகள் (மீள்பார்வை)<br>- வேற்றுமைகளின் அருகே வல்லினமெய் மிகுதல்<br>கலவைமுறைக் கற்றல், மாணவர் கற்றல் தளங்களில்வழிக் கற்றல். | சிறுகதையின் கூறுகளை நினைவுக்கூறி ‘கதைக்கருவைப்பற்றி’ இன்னும் ஆழமாக அறிந்துகொள்வர்.<br><br>ஒலிப்பகுதியைக் கேட்டு குழுநிலையில் பேச்சுத்தமிழில் கலந்துரையாடுவர். பின்னர் வினாக்களுக்கு விடையளிப்பர்.<br><br>கேட்கப்படும் வினாக்களுக்கு ஏற்ப கருத்துகளைப் பேச்சுத்தமிழில் பேசிக் கலந்துரையாடுவர். |
| 4 | **<u>படித்தல்</u>**<br>ஒவ்வொரு சொட்டு நீரையும் சேமிப்போம் என்னும் தலைப்பில் ‘1B’ பாடநூலில் கொடுக்கப்பட்டுள்ள பனுவலைப் படிப்பர்.<br>**<u>எழுதுதல்</u>**<br>நீரின் அவசியம் என்ற தலைப்பில் நிகழ்வுக் கட்டுரை எழுதுவர்.<br>**<u>கேட்டல்</u>**<br>தொகுதி 3ற்கான கேட்டல் பகுதியை நன்கு கேட்டுப் புரிந்துக்கொள்ளவார்கள்.<br>**<u>பேசுதல்</u>**<br>ஒவ்வொரு பாடத்தொகுதியிலும் நுழைவாயில் பகுதியில் கொடுக்கப்பட்டிருக்கும் படங்கள், வினாக்கள் மற்றும் ஒளிக்காட்சிகளைப் பற்றிக் கலந்துரையாடுவர்.<br>**<u>இலக்கணம்:</u>**<br>- நிறுத்தற்குறி (மீள்பார்வை) | சரியான உச்சரிப்போடு, பொருத்தமான இடங்களில் நிறுத்தி வாய்விட்டுச் சரளமாகப் படிப்பர்.<br><br>படைப்பாக்கத் திறனை வெளிப்படுத்தும் வண்ணம் நிகழ்வுக் கட்டுரை எழுதுவர்.<br><br>ஒலிப்பகுதியைக் கேட்டு குழுநிலையில் பேச்சுத்தமிழில் கலந்துரையாடுவர். பின்னர் வினாக்களுக்கு விடையளிப்பர். |

| | | |
|---|---|---|
| | - உவமை அணி<br>கலவைமுறைக் கற்றல், மாணவர் கற்றல் தளங்களில்வழிக் கற்றல். | கேட்கப்படும் வினாக்களுக்கு ஏற்ப கருத்துகளைப் பேச்சுத்தமிழில் பேசிக் கலந்துரையாடுவர்.<br>**<u>மதிப்பீடு:</u>**<br>தாள் 1 – மின்னஞ்சல், கட்டுரை/கதை எழுதுதல்<br>தாள் 2 – மொழிக்கூறுகளும் கருத்தறிதலும்<br>தாள் 3 – கேட்டலும் பேசுதலும் |